நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: எட்டு

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 24 ஞாயிற்றுக்கிழமை (8-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 253

# யுத்தத்தில் வெல்வதற்கு முடியாவிடில் அரசு ராஜினாமா செய்ய வேண்டும்

## சிங்கள அமைப்புகள் வற்புறுத்து

கொழும்பு, ஆகஸ்ட் 8

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது போனால் அரசு ராஜினாமாச் செய்ய வேண்டும்.

இவ்வாறு தெற்கில் உள்ள சிங்கள அமைப்புகள் அரசாங்கத்திடம் வலியுறுத்தி உ ளளன.

இராணுவத்தின் பலம் விடுதலைப் புலிகளின் பலத்தை விட குறைந்தது என்ற நிலையிருப்பின் - அவ்வாறு கருதப்படுமாயின் - நாம் அடிபணிந்து யுத்தம் புரிவதை நிறுத்துவதே ஒரே வழி - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பிரபல வழக்கறிஞர் எஸ். எல். குணசேகரா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கொழும்பு கோட்டையில் உள்ள நாகவிகாரையில் பல சிங்கள அமைப்புகள் சில நாட்களுக்கு முன்னர் மாநாடு ஒன்றை நடத்தின.

தேச பிரேம பிக்கு பெரமுன சிங்கள பிரசாதய தேசரச சிங்கள சட்டத்தரணிகள் சங்கம், தேசிய சுதந்திர இயக்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட பல அமைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உருப்படியான யோசனை எதனையும் அரசாங்க அதிபர் எடுத்து வரவில்லை

யாழ்ப்பாணம், ஆக. 8

உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக எந்த விதமான உருப்படியான யோசனை எதனையும் அரச அதிபர் கொழும்பில் இருந்து கொண்டுவரவில்லை. கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகள் ஏற்கனவே விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப அரசு யாழ். அரச அதிபர் மூலமாக உருப்படியான யோசனைகளையோ, திட்டங்களையோ அனுப்பி வைக்கவில்லை.

இப்படி 'புலிகளின் குரல்' வானொலி நேற்றுத் தெரிவித்தது.

இதற்கிடையில் —

யுத்தக் கைதிகள் விடுவிப்புத் தொடர்பாக அரசின் போக்குக் குறித்து விடுதலைப் புலிகளின் தமிழ் ஈழ அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில் —

''கைதிகளை விடுவிப்பது தொடர்பாக — முன்னேற்றகரமான — யோசனை எதனையும் அரசு முன்வைக்கவில்லை. உண்மையில் கைதிகள் விடுவிப்புக் குறித்து அரசு அசமந்தப் போக்கையே கடைப்பிடிக்கிறது!'' — என்றார்.

அதேசமயம் — யாழ். அரச அதிபர் நாளை மறுதினம் செவ்வாயன்று மீண்டும் கொழும்பு செல்ல இருக்கிறார் என்று புலிகளின் குரல் வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-உ-5)

## பண்ணை பாலத்தில் முன்னேற முயன்ற படையினர் மீது தாக்கு

பண்ணைப் பாலத்தில் இருந்து நேற்று அதிகாலை 6-15 மணியளவில் 125 யார் தூரம் முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தினர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்துப் பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் எதுவும் தெரியவரவில்லை. [இ-5]

## காமினியை அரசில் சேர்ப்பது இந்தியாவின் உதவி பெறவே

### ராவய ஆசிரியர் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 8

வடக்கு — கிழக்குப் பிரச்சினையை சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ தீர்க்க வேண்டுமானால் அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியமானதாகும். ஜனாதிபதி விஜேதுங்கா காமினி திஸநாயக்காவை அரசாங்கத்தில் சேர்க்கும் முயற்சியின் உள்நோக்கம் இதுதான்.

''ராவய'' ஆசிரியர் விக்ரர் ஐவன் நேற்று பி. பி. ஸி, சிங்களச் சேவையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவின் ஆதரவைப் பெறக் கூடியவர் தாம் ஒருவர் மட்டுமே என காமினி திஸநாயக்கா நம்புகிறார் என்றும் 'ராவய' ஆசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-6)

## உண்ணாவிரதம் தொடர்கிறது

யுத்தக் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்காததால் யுத்தக் கைதிகள் தமது உண்ணாவிரதத்தைத் தொடருகின்றனர் என்று புலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்தது. (இ-5)

## நேர்முகப் பரீட்சைக்கு சென்ற பெண் கைது

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றிருந்த தமிழ்ப் பெண் உத்தியோகத்தர் ஒருவர் கொழும்பில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட மேற்படி பெண் அரச உத்தியோகத்தர். யாழ். தொழில் திணைக்களத்தில் பணி புரிகிறார். அவர் நேர்முகப்பரீட்சை ஒன்றிற்காக இங்கிருந்து கொழும்பு சென்றிருந்தார். (இ-5-9)

## கிளாலியில் மோதல்

கிளாலி கடல் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே மோதல் இடம் பெற்றது.

சுமார் ஒரு மணிநேரம் நடந்த மோதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரிய வரவில்லை. [இ-117-17]

### இனப்பிரச்சினை குறித்து

## சுதந்திரக் கட்சியின் கொள்கை தெரிய வரும்

பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினை குறித்து தனது கொள்கையை விவரமாகத் தெளிவுபடுத்த இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் புனரமைப்புக் குழு இது தொடர்பான கொள்கை விளக்கம் ஒன்றை வெளியிட இருப்பதாகவும்—

சுதந்திரக் கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது சமர்ப்பிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ-6]

## டாக்டர்கள், அதிபர்கள் கடத்தப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், ஆக. 8

பொலனறுவை, மட்டக்களப்பு எல்லைக் கிராமங்களில் தமிழ் டாக்டர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் பலர் கடத்தப்பட்டு வருகின்றனர் என தகவல் ஒன்று தெரிவிக்கிறது

இராணுவத்தினராலேயே இவர்கள் கடத்தப்பட்டு வருவதாகவும் பின்னர் இவர்கள் காணாமற்போய் விடுவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த மூன்று மாதகாலப் பகுதியில் சுமார் 200 பேர் வரை இவ்வாறு கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (இ-5)

## குமாரியில் தபால்கள்

யாழ்ப்பாணம். ஆக. 8

நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்த குமாரி கப்பலில் 96 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தபால் பொதிகள் இன்று தரம் பிரிக்கப்பட்டு நாளை விநியோகிக்கப்படும்.

இதற்கிடையில் 'ஐஸண்ட்' கப்பல் ஒரு தொகுதி மண்ணெண்ணெய் பரல்களுடன் இன்று பருத்தித்துறை வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-9-5-173-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி தாதியர் பயிற்சி நெறி

DIPLOMA - IN NURSING - AID

அனுமதிகள்:
19 - 08 - 93 வரை நீடிக்கப்பட்டுள்ளன.

சாயி மெடிக்கல் அக்கடமி
இல: 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5653)


# வதிவிட அனுமதி வீஸா வழங்குவதில் புதிய கட்டுப்பாடுகள்

## இலங்கையரை திருமணம் செய்தால் ரூ.12 லட்சம் வைப்பிலிட வேண்டும்

கொழும்பு, ஆக. 8

வெளிநாட்டவர் தங்குவதற்கான வதிவிட அனுமதி வீஸா வழங்குவதில் அரசு பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியர்கள், அமெரிக்கர்கள் மற்றும் ஜேர்மனியர்கள் என நூற்றுக்கணக்கானோர் இலங்கைக்கு வந்து இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதாகவும் — இனிமேல் அவ்வாறு திருமணத்தின் பேரில் இலங்கையில் தங்க விரும்பும் வெளிநாட்டு ஆண்கள் வங்கி ஒன்றில் 12 லட்சத்து 50 ஆயிரம் இலங்கை ரூபாவை காப்புப் பணமாக செலுத்த வேண்டும் என்றும் —

இலங்கைப் பெண்ணை அந்த வெளிநாட்டவர் கைவிட்டுச் செல்ல நேரிடும் சமயம் அந்தப் பணம் திருமணமான இலங்கைப் பெண்ணுக்கு உரித்தாகும் என்றும் குடியுரிமை அதிகாரி அறிவித்துள்ளார்.

(இ-5)

# அநுராதபுரம் எரிபொருள் நிலையத்தில் கொள்ளை!

கொழும்பு, ஆக. 8

அநுராதபுரம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த விற்பனைப்பணமான ஒருலட்சத்து 25ஆயிரம் ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டதாக பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு ஆயுதபாணிகளாக வந்த5பேர் இந்தக் கொள்ளையை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-3)


# O/L DEC 93

- கணிதம்
- விஞ்ஞானம்
- தமிழ்
- சமூகக்கல்வி
- ஆங்கிலம்
- சமயம்
- வர்த்தகம்
- விவசாயம்
- மனைப் பொருளியல்
- சித்திரம்
- சங்கீதம்
- நடனம்

ஆகிய பாடங்களுக்கான

- பாட வகுப்புக்கள்
- வினா - விடை வகுப்புக்கள்
- மாதாந்த பயிற்சிப் பரீட்சைகள்

புதிய பிரிவுகள்
ஆரம்பம்:- → 10 - 08 — 93

BOND கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம். (6409)


## சர்வோதய பெண் ஊழியர்களின்

# அடிப்படை உரிமை மீறல்; உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

கொழும்பு, ஆக. 8

சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு பெண் ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுடன் —

அவர்கள் இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா நட்ட ஈடாக வழங்கப்பட வேண்டும் என்றும் அரச தரப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சர்வோதய இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பாளரான திருமதி டில்லிமலர் மற்றும் அங்கு காசாளராக பணிபுரிந்து வந்த செல்வி ஜி மேரி டுல்சி ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைமீறல் வழக்கிலே உயர்நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியது.

இரு மனுதாரர்களையும் இரகசியப் பொலீஸார் சட்டவிரோதமாகக் கைது செய்ததுடன் சட்டவிரோதமாக தடுத்து வைத்திருந்தனர் என்றும் உயர்நீதிமன்றம் தமது தீர்ப்பில் கூறியுள்ளது.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோது அவமரியாதையாக நடத்தப்பட்டதற்காக முதலாவது மனுதாரருக்கு மேலும் 3 ஆயிரம் ரூபா நட்ட ஈடாக அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நான்கு நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற பெஞ்ச் இத்தீர்ப்பை வழங்கியது.

(த-எ)

## பாடசாலைகளில்

கைதடி இழக்கு சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு கைதடி கிழக்கு வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான முன்றலில் நிலையத் தலைவர் திரு. ச. வரதராசா தலைமையில் நடைபெறும்.

(த)

# செய்திக் கொத்து

## செஞ்சிலுவை சுவரொட்டி

உயிராபத்தில் இருந்து மாணவர்களைக் காப்பாற்றும் நோக்குடனான சுவரொட்டிகளை யாழ். செஞ்சிலுவைச் சங்கக் கிளை வெளியிட்டுள்ளது. குடாநாடெங்கும் முக்கிய இடங்களில் காணப்படும் இச்சுவரொட்டிகளில் கண்களுக்குப் பழக்கம் இல்லாத பொருட்களைக் கண்டால் ஆசிரியர்கள் மூலம் தெரிவிக்க வேண்டிய இடங்களுக்கு அறிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

(க-51)

## குடிநீர் வசதி

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தற்போது இயங்கி வரும் 17 பாடசாலைகளிலும் மாணவர்கள் குடிதண்ணீர் பெறக்கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலைகள் அனைத்துக்கும் வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம் குழாய்கள் பொருத்தப்பட்ட தண்ணீர் பரல்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

(க-173)

## கூட்டுத்தாபனமாக மாற்றப்படும்

அரியாலை, ஆக. 4

நாடு பூராவும் உள்ள தபால் திணைக்களங்களை கூட்டுத்தாபனங்களாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் கொழும்பில் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

தபால் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களாக மாறினால் உள்ளூர், வெளியூர் தபால் கட்டணங்களின் தொகை அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தபால் திணைக்களம் கூட்டுத்தாபனங்களாக மாற்றப்பட்டதும் தபாலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் குறைக்கப்பட்டு இடம் மாற்றமும் செய்யப்படுவார்கள்.

(த-17)


# பணி வெற்றிடம்

ஆங்கில மருந்து வாணிபத்தில் அனுபவம் உடையவர்களிடமிருந்து விற்பனையாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள் :-

க. பொ. த. (சா/த) வில் சித்தியும் ஆகக் குறைந்தது இப்பதவிகளில் ஏதாவதொன்றில் மூன்று வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் 10-08-93 காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் (கந்தர்மடத்தில்) பலாலி வீதியில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்திற்கு உரிய சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

சேரன் பல்பொருள் வாணிபம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(26864)


# நாடக உணர்ச்சிக் கட்டங்களை பாடலால் காட்டியவர் வைரமுத்து

## நினைவு விழாவில் பேராசிரியர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஆக. 6

"பாடல் மரபின் ஊடாக நாடகத்தின் உணர்ச்சிக் கட்டங்களைக் காண வைத்தவர் வைரமுத்து. அவர் பாடல்களை இலக்கிய ரீதியாக விளக்கும் ஆற்றலினூடாக சிறப்பான ஒரு அரங்கை நிர்மாணித்தவர்.

நடிகமணி வி. வி. வைரமுத்துவின் நான்காவது நினைவுவிழாவில் சிறப்புரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு கூறினார்.

காங்கேசன்துறை வசந்தகான சபாவின் ஆதரவில் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை தலைமையில், யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அண்மையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து பேசிய பேராசிரியர்,

"19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய மாற்றத்தின் காரணமாக யாழ்ப்பாணத்தவரிடையே கலைகளை மிகைப்பட பயிலும் நிலை குறைந்தது. இப்பின்னும் குறிப்பிட்ட மட்டத்தில் அதன் பயில்முறை தொடர்ந்துள்ளது. அந்த மரபில் வந்த வைரமுத்து போன்றவர்களால் பாடலே அரங்கமாகக் கலை வடிவம் பெற்றது" என்று கூறினார்.

திரு காரை சுந்தரம்பிள்ளை தமது தலைமை உரையில்,

"நடிகமணி வைரமுத்து நடிகர் மட்டுமல்ல. சாஸ்திரிய சங்கீதத்தை முறையாகக் கற்ற அறிஞரும் மதுரைத் தமிழ்ச்சங்கப் பாலபண்டிதரும் ஆவார். நாடகத்துறையின் மீது கொண்ட பற்றுதலினால் ஆசிரியத் தொழிலைத் துறந்து அவர் அனுபவம் மிக்க கலைஞர்களுடன் நெருங்கிய ஈடுபாடு கொண்டார். அவரை அரிச்சந்திரனாகத் தந்த பெருமை பழம்பெரும் நடிகை எம். ஆர். கமலவேணிக்கே உரியது" என்று கூறினார்.

திரு. ஆ. கனகசபாபதி பேசும்போது "தமது உயிர்த்துடிப்பான நடிப்பாற்றலினால் தமிழ் மக்களிடமன்றிச் சிங்கள மக்களிடத்திலும், ரசிகர்களை ஏற்படுத்திக் கொண்டவர் வைரமுத்து. அவரின் அரிச்சந்திரன் மயான காண்டம் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இரண்டாயிரம் தடவைகளுக்கு மேல் மேடை ஏறியது. இன்று மறைந்து கொண்டிருக்கும் இசை நாடகக் கலையை வளர்க்க நாடகப்பட்டறைகள் முன்வர வேண்டும்" என்று கூறினார்.

ஓய்வுபெற்ற அதிபர் திரு க. முருகேசு, திருமதி இரத்தினம் வைரமுத்து ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர். கலைமாமணி வே. மார்க்கண்டு, நாடக திலகம் வி. நற்குணம் ஆகியோரைப் பேராசிரியர் சிவத்தம்பி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். திரு. சி. செல்வராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

சிறுமியரின் நடிப்பில் இடம்பெற்ற மயானகாண்டம் இசை நாடகம் ரசிகர்களின், பெரும் பாராட்டைப் பெற்றது.

(க-111)


# THANKS GIVING

The Family of the late Mrs PAVALAM SUKIRTHARATNAM WINSLOW, Sincerely Thank all relations, Friends, well wishers who Shared in their sorrow and Helped in Various ways. They also Thank the Doctors, Nursing staff and Other staff of the Green Memorial Hospital Manipay, Who Attended on her, During her brief Illness.

They Thank the Clergy of the J. D. C. S. I. for Having Conducted the Funeral service.

Mrs. Suganthy Vasanthakumar
(Daughter)

(6617)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இன்ப நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# பொய் கூறியும் அவப்பட்டங்கள் கட்டியும் தமிழரை வெல்ல நினைக்கும் அரசின் போக்கு

## தோல்வியை ஒப்புக் கொள்ளாத பண்பின்மை சமாதானத்துக்கும் அமைதிக்கும் வழி செய்யாது

அரசியல்

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

தமிழர் கடவுள் அழகன் முருகனின் வேலின் வல்லமையை, அதன் கூரிய தன்மையை இவ்வாறு பாடுகிறார் நக்கீரர், தமது திருமுருகாற்றுப்படையில்.

இப்போது, தமிழர் அரசதானியான நல்லூரில் அருளாட்சி புரியும் நல்லைக் கந்தனுடைய திருவிழாக் காலம் யாழ்ப்பாணத்துச் சைவப் பெருமக்களின் தேசியப் பெருவிழாவாக அது அமைந்து இருக்கிறது எனலாம்.

கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியனின் அரசதானியாக விளங்கியது நல்லூரே. தமிழ்-இந்து கலாசாரத்தின் உறைவிடமாகவும் கேடயமாகவும் மிளிர்ந்த நல்லூர் அரசு 1619 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரிடம் வீழ்ந்தது. போர்முனையிலேயே போர்த்துக்கேயர் நல்லூரைக் கைப்பற்றினர்.

375 வருடங்களுக்கு முன்னர் பிறரிடம் வீழ்ந்த தமிழர் அரசு இன்னும் மீட்கப்படவில்லை. போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், சிங்களவர் என்று கைமாறி உள்ளது.

போர்முனையிலே இழந்த தமிழரசை நிறுவ இப்போது தான் ஈழத்தமிழர்கள் வேல் (ஆயுதம்) எடுத்துப் போராடுகிறார்கள். அந்தப் போராட்டம் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் வித்தாகி இப்போது பெருவிருட்சமாகி வளர்ந்து நிற்கிறது.

சங்கிலியன் காலத்துப் போர் முறையும் இன்றைய நவீன போர் முறையும் வேறுபட்ட வடிவங்களில் அமைந்தவை. அன்று நேருக்கு நேர் போர் நடந்தது. இன்று தூரத்தே நின்று நடக்கும் போர் முறை. பல மைல் தொலைவில் நின்று எதிரிப் படைகளை தாக்க வல்ல ஆயுதங்கள். குறுகிய தூரமே பாய்ந்து வேலினதும் அம்பினதும் இடத்தைப் பிடித்துள்ளன.

பட்டங்கட்டுவது எதற்காக?

தமிழர்கள் தங்கள் இழந்த அரசை மீட்பதற்காக நடத்தும் இந்தத் தர்ம யுத்தத்துக்கு, சிங்கள அரசு பயங்கரவாதம் எனப் பெயரிட்டிருக்கிறது. தமிழர்கள் தமது மண்ணையும் அரசையும் தம்மிடமே தருமாறு கேட்பதற்குப் பிரிவினை என்று நாமம் சூட்டுகிறது.

தமிழர்கள் நடத்தும் யுத்தம் நியாயமற்றது என்று வெளி உலகுக்குக் காட்டிக் கொள்வதற்காக, தமது ஆணவச் செருக்கையும் அதர்மப் போக்கையும் மறைத்துக் கொள்வதற்காகவே பயங்கரவாதம், பிரிவினை என்று பட்டங்கட்டுகிறது. ஆண்ட தமிழினம் மீண்டும் ஒருமுறை ஆள முனைவது தவறு என்று வெளியாருக்கு, சர்வதேசங்களுக்குக் காட்டிக் கொள்வதற்காக இந்த இரண்டு அவப் பட்டங்களையும் சூட்டி உலகத்தை ஏமாற்றி வருகிறது.

உள்நாட்டில் இருந்து கொண்டு, தமது பிரசாரத் தந்திரங்கள் மூலமும், ஒரு நாட்டின் அரசு என்ற அந்தஸ்தின் மூலமும் உலகத்தை ஏமாற்றுவது போதாதென்று, அரச அமைச்சர்கள், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் அந்த விஜயங்களைத் தக்கபடி பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஹரோல்ட் ஹேரத் இரண்டு அப்பட்டமான பொய்களை வெள்ளைக்காரருக்குக் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளை நாங்கள் தாக்குவதில்லை. அவர்கள் தான் எங்கள் படையினரைத் தாக்குகிறார்கள் விடுதலைப் புலிகள் தாக்கும் போது மட்டுமே எமது படையினர் பாதுகாப்புக் கருதி ஆயுதப் பிரயோகம் செய்கின்றனர் என்பது முதலாவது பொய்.

விடுதலைப் போரைத் தமிழர்களே தொடங்கினார்கள் என்று அவர் கூறியிருப்பின் அது பொருந்தும்

தமது ஆட்சி உரிமையை சிங்களவர்கள் சமாதான முறையில் வழங்கமாட்டார்கள். தங்கள் தாயகத்தை அடாத்தாகப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், தங்கள் மண்ணைச் சிங்களவர் பிரதேசமாக்கவும் பெரும்பான்மையினர் என்ற தமது பலத்தைப் பயன்படுத்துகிறார்கள். எனவே தமது பலத்தை சங்கிலியன் காலத்தில் இருந்த தமிழ் அரசை இனியும் சிங்களவர் கையில் விடமுடியாது என்ற முடிவுடனேயே தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் அதனை ஆயுதப் போராட்டமாக மாற்றியுள்ளார்கள். போர் முனையில் இழந்த தமிழரசை, போர் முனையிலேயே மீட்கத் திடசங்கற்பம் பூண்டு வீரத்தோடும், தியாகத்தோடும் போராடுகிறார்கள். அதுவே உண்மை.

யுத்தப் பிரகடனம் செய்தது அரசே

ஆனால் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தைப் பிரகடனம் செய்தவர்களும், யுத்தத்தைத் தொடங்கியவர்களும் சிங்கள அரசினரே தமிழர் பிரதேசங்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் — இராணுவப் பிடியின் கீழ் — கொண்டு வருவதற்காக யுத்தத்தைத் தீவிரமாக்கியவர்கள் அவர்களே.

யுத்தத்தை தொடங்கிய பின்னர் அதனைக் களத்திலே — போர்முனையிலே நின்று போராடாமல் ஆகாயத் தாக்குதல், கடல்தாக்குதல் போன்றவற்றால் நிராயுதபாணிகளான தமிழர்களைக் கொல்பவர்களும் ஸ்ரீலங்கா அரசின் படையினரே!

நிலைமை அவ்வாறிருக்க, ஸ்ரீலங்காப் படையினர் தாக்குவதில்லை என்று பொய் சொல்வது எப்படிப் பொருந்தும்?

விடுதலைப் புலிகள் இராணுவ முகாம்களை தேடிச் சென்று அழித்து நிர்மூலமாக்கி, அரசு பெரும் பணம் கொடுத்து வாங்கிய ஆயுதங்களையும் தமதாக்கி வெற்றிவாகை சூடும் தாக்குதல்களைத்தான் அமைச்சர் புலிகளே எங்களைத் தாக்குகிறார்கள் என்று கூறினாரோ என்னவோ! அந்த அர்த்தத்தில் அவர் கூறியிருப்பின் நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது சாட்டு என்று கொள்ளலாம்!

ஆனையிறவில் ஸ்ரீலங்காவின் முப்படைகளுடனும் சரிசமமாக நின்று நடத்திய போர். கட்டைக்காட்டில் பெரிய ஆயுத விநியோக முகாமைத் தாக்கி ஆயுதம் அள்ளியமை இப்போது மணிலண்டிமலையில் ஆயுதங்களும் பணமும் குவித்த மலையனைய பேரடி— புலிகளின் இந்த வெற்றித் தாக்குதல்கள் இராணுவத்துக்கும், அரசுக்கும் இடைத்த மிகப் பெருந் தோல்விகள்.

இராஜினாமாச் செய்திருக்க வேண்டும்

மணலண்டிமலைத் தோல்வி ஸ்ரீலங்காப் படைகளின் இயலாமையையும், பலவீனத்தையும் மிகப் பெரிய அளவில் நிரூபித்திருக்கிறது ஆனால் அதனை ஒப்புக்கொள்ளவும், சீரணிக்கவும் அரசாங்கமும், படைத் தலைமைப்பீடமும் பின்னிற்கின்றன. இந்தத் தோல்வி ஒன்றை வைத்தே இராணுவத் தளபதி இராஜினாமாச் செய்திருக்க வேண்டும். அவர் மட்டுமென்ன, அரசும் இராஜினாமாச் செய்திருக்க வேண்டும். தோல்வியை ஒப்புக்கொண்டு யுத்தப் பிரகடனத்தை வாபஸ் செய்து, யுத்தத்தை நிறுத்தி இருக்க வேண்டும்.

ஆனால் மணலண்டிமலை வெற்றி தெற்கில் அரசியல்வாதிகளிடையே ஆத்திரத்தையே உருவாக்கியுள்ளது அந்த ஆத்திரத்தில் புத்தி மத்திமமாகி தென்னிலங்கை முழுவதையும் யுத்தத்துக்குத் தயாராக்க வேண்டும் என்று சிறிமா முதல் காமினி கட்சியின் பிரேமச்சந்திரா வரை ஒலமிடுகிறார்கள். இது நிச்சயமாக தோல்வியை ஒப்புக் கொள்ளும், ஏற்றுக்கொள்ளும் தகுதியில்லாத விளையாட்டு வீரனின் கோப உணர்ச்சிக்கு ஒப்பானது. அத்தகையவன் விளையாட்டில் இருந்து வாபஸ் பெறவேண்டியவனே.

தோல்வியை ஒப்புக்கொள்ளாத பண்பின்மை சமாதானத்துக்கும் அமைதிக்கும் வழி செய்யாது.

அமைச்சர் ஹேரத் லண்டனில் கூறிய இரண்டாவது பொய் இதுதான்;

விடுதலைப் புலிகளின் விடாப்பிடித் தனத்தாலேயே அரசின் தீர்வு முயற்சிகள் வெற்றி பெற முடியாமல் இருக்கின்றன — என்பதாகும்.

நிபந்தனையற்ற முறையில் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் தயார் என்று, 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியிலேயே விடுதலைப் புலிகள் அறிவித்து விட்டார்கள். அதன் பின்னர் கடந்த மூன்று வருடங்களாக சமாதானக் கதவுகள் திறந்தே உள்ளன என்று விடுக்கடி வலியுறுத்தி வருகிறார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழீழத்துக்கு மாற்றான தீர்வு ஒன்றை அரசு முன்வைக்குமாயின் அதனைப் பரிசீலனை செய்யத் தாம் தயாராக இருப்பதாகவும் தலைவர் பிரபாகரன் தமது பிரசித்திபெற்ற பி. பி. ஸி. பேட்டியில் அறிவித்திருந்தார்.

அதன் பின்னரும், கடந்த ஆறு மாதங்களாக யுத்தத்தை நிறுத்துவது குறித்தோ, மாற்றுத் தீர்வு ஒன்றை முன்வைப்பதிலேயோ அரசு ஆக்கபூர்வமான, நம்பத்தகுந்த எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை அரசியல் தீர்வு, பேச்சுக்குத் தயார் என்ற வெறும் வாய்ச் சாவடல்களிலேயே காலத்தைப் போக்கி வருகிறது

இங்கே விடாப்பிடித் தனத்தைக் கைக்கொண்டிருப்பவர்கள் அரசாங்கமா? விடுதலைப் புலிகளா

கடைசி ஓலம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென காலம் கடத்துவதற்கு நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவிடமே ஓர் ஆலோசனையை முன்வைக்க விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகள் வேறு எதனை உருப்படியாகச் செய்யும் என எதிர்பார்ப்பது? கடைசியில் கம்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி போல, இழக்கில் சர்வசன வாக்கெடுப்பு என்ற ஓலத்துடன் தெரிவுக்குழு உயிர்போக்கிக் கொண்டிருக்கிறது.

அரசியல் தீர்வில் நாட்டமில்லாதவர்களுக்கு மணலண்டி மலை பேரடியாக விழுந்ததில் வியப்புஎதுவுமில்லையன்றோ! அடி விழுந்தால் ஒருவன் திருந்துவான் என்றே பொதுவாக எதிர்பார்க்கப்படுவதுண்டு. ஆனால் எத்தனை அடி அடித்தாலும் திருந்தாத — புத்தி வராத — பாடம் படிக்காத— துட்டர்களாகவே ஸ்ரீலங்கா அரசும், தெற்கின் தலைவர்களும் நிலைக்க விரும்புகிறார்கள்.

சூரனின் துட்டத் தனத்தையும், அதர்மத்தையும் முருகனின் துள்ளிச் சென்ற வேல் வதைத்தது. அதேபோல தெற்கின் சூரத்தனத்தையும், அதர்மத்தையும் போக்க தமிழர்களின் மனோபலமும் வீரமும் செறிந்த வேல் துள்ளிச் செல்ல வேண்டும் என்று கூறுவதை விட வேறெப்படிச் சொல்லலாம்!

— உதயகாந்தன் —

★

## நன்றி

14-7-93 புதன்கிழமை நடைபெற்ற கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தின் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட நலன் விரும்பிகள், பெற்றோர்கள், பரிசில் உபகரித்தோர்கள் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. அ. குகதாஸ்
(பாலர் பாடசாலை ஆசிரியை)

இ. குழந்தைவடிவேலு
(பொதுச் செயலாளர்)

(இ-5652)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒன்றரை மாத நல்லின சேவல்கள் விற்பனைக்குண்டு. பக்குவமாக வளர்க்கப்பட்டவை. ஊர்க்கோழிகளுடன் கலப்பினம் செய்து அதிக முட்டையிடும் கோழிகளை உருவாக்க உகந்தவை. 1010/9, கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி. (26648)

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26821)

கச்சான் உடைக்கும் மெஷின் கச்சான் கோது வேறு பருப்பு வேறாக்கக் கூடிய புதிய மெஷின் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தையடி, மானிப்பாய். (26793)

## மலிவு விற்பனை

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள்: விடைகளுடன் 6-8-93 முதல் 14-8-93 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம் Bond கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6402)

## நாய்க்குட்டிகள்

அழகிய பொமனேரியன் 3½ மாத நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (சகல தடுப்பு ஊசிகளும் போடப்பட்டுள்ளன) தொடர்பு: இல: 48/1, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, (ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி), யாழ்ப்பாணம். (26861)

## மணமகள் தேவை

35 வயதுடைய கனடாவில் நிரந்தர வதிவிடமுள்ள பூராடம் நட்சத்திரம், 4ஆம் பாதம், செவ்வாய்க் குற்ற மற்ற, நிரந்தர தொழில் பார்க்கும நற்குணமுடைய வரனுக்கு நற்குடும்பத்தில் உள்ள பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். விண்ணப்பிக்கவும். 913, மே/பா உதயன். (சி-5651)

## பராமரிப்பாளர் தேவை

செல்வச்சந்நிதி அடியார் மடத்துக்குப் பராமரிப்பாளர் தேவை. ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கணவன் மனைவியோ, தனியாளோ காலை 9 மணியின் மேல் நேரில் வரவும். ம. வெங்கடாசல பிள்ளை, நிர்வாகி, அடியார் மடம், செல்வச்சந்நிதி, தொண்டமனாறு. (26840)

## தவறிவிட்டது

இளாலிக் கரையில் 28-7-93 அன்று 591702921V இலக்க அடையாள அட்டை, பென்ஷன் சம்பந்தமான கடிதங்கள் மற்றும் பொருள்களுடன் Travelling Bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ம. தேவக்குமாரன், வட்டு இழக்கு, சித்தன்கேணி என்ற விலாசத்திற்கு தயவுசெய்து அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (26851)

## விஞ்ஞானம் O/L

அலகு ரீதியான மாதிரி வினா-விடை வகுப்பு 7-8-93 (காலை 6-00 மணி) ஆரம்பம் ஞாயிறு சனிக்கிழமைகளில் காலை 6-00மணிக்கு வகுப்புக்கள் நடைபெறும். ஆசிரியர் J. J. ஜெலின்ஸ். வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதா கோவில் அருகில் (சோபா வீதி), உயரப்புலம், ஆனைக்கோட்டை. (26850)

## வேப்பம் விதை

சுத்தமான வேப்பம் விதை கிலோ ரூ. 6/-, நன்றாகக் காய்ந்த வேப்பம் பழக்கோது கிலோ ரூ 2/- வாங்குகிறோம். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கொடுக்கலாம். ''மில்க்வைற்'' (சி/5569)

## O/L MATHS

G.C.E (O/L) இல்கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6406)

## தேவை

யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்ட ஒருதனியார் மருத்துவமனைக்கு பகல் முழு நேரக் கடமை செய்யக்கூடிய டாக்டர் (MBBS) ஆண்/பெண் ஒருவர் தேவை. ஓய்வு பெற்றவரும் விண்ணப்பிக்கலாம் 551, C/o உதயன் யாழ்ப்பாணம். (26804)

மாட்டுப்பண்ணை தோட்ட வேலை செய்வதற்கு அமைய அடிப்படையில் ஆள் தேவை. சுயமாக தயாரித்த விண்ணப்பத்தை 12-08-93ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். பதில் பொதுமுகாமையாளர் யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி/5575)

## பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள்

1991ஆம் ஆண்டு தொடக்கம் யாழ் போதனா வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகள் உட்பட யாழ். நகர் மேற்கு பிறப்பு பதிவாளர் பிரிவில் பிறந்த குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை யாழ். போதனாவைத்திய சாலைப் பதிவாளர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை 1993 ஜூன் மாதம் வரை பிறந்த சகல குழந்தைகளினதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் முடிவடைந்த நிலையில் உள்ளன என பதிவாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-15)

## 41ஆம் நாள் நினைவினிலே....



| தாயின் மடியில்: | ஆண்டவர் அடியில்: |
|---|---|
| 06 | 29 |
| — | — |
| 04 | 06 |
| — | — |
| 1965 | 1993 |

செல்வி

### மேரி ஸ்ரெலா மாட்டீன்

அண்ணாவும் அண்ணியும் - அவர்
பெற்ற புத்திரரும்
ஒன்றாக உன் பிரிவில்
வாடுகிறார் ஸ்ரெலாவே
நன்றாக நீ செய்த
நற்கருமம் யாவிலுமே
நின்றார் தேவ பிதா
அவர் நிழலே உன்னிருக்கை.
ஊனுற்ற உடல்தான் உலகிலே பாழாக
ஊனற்ற புகழுடலே உன்னாமம்-
பெறநிலைக்கும்,
வானுற்ற தேவன் மறவாத நற்கருணைத்
தேனொத்த ஸ்ரெலா நீயே
அவர் தானைத் தாங்கிடுவாய்.

இவரின் பிரிவால் துயருறும்,
சின்னண்ணா, சின்னண்ணி,
மருமக்கள்.

254, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (26852)


போசாக்கின்றி வாடுகிறீர்களா?
தொழிலின்றி தவிக்கின்றீர்களா?
எதுவானாலும் இன்றே நாடுங்கள்:

காமதேனு விவசாய கால்நடைப் பண்ணை

ஊர்கள் அனைவரினதும்

உணவுத் தேவைக்கான:
- இறைச்சிக் கோழிகள்
- கோழி முட்டைகள்
- தாரா முட்டைகள்
- முயல்கள்
- பசுப் பால்

சுய தொழில் வளர்ச்சிக்கான:
- ஒரு மாத இரண்டு மாத வயதுடைய மேட்டுக் குஞ்சுகள்
- நல்லின அடைமுட்டைகள்
- கால்நடை மருந்து வகைகள்
- கால்நடை தீவனங்கள்
- மரக்கன்றுகள்
- முயல் குட்டிகள்

போன்றவை உங்கள் தேவைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றன

- அத்துடன் உங்கள் உற்பத்திப் பொருள்களாகிய எள்ளுப் பிண்ணாக்கு, சோளம், குரக்கன், கருவாடு, இறுங்கு, தவிடு, தேங்காய் பிண்ணாக்கு என்பனவும் கொள்வனவு செய்யப்படுகின்றன.
- மற்றும் நல்லின ஆடுகள் மூலம் இயற்கை முறைகளில் சினைப்படுத்தியும் கொடுக்கப்படுகின்றன.

தரமான நிலையில் மலிவான விலையில் உங்கள் தேவைகளைப் பெற்றுக் கொள்ளவும் உங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்தவும்

இன்றே நாடுங்கள்:

காமதேனு விவசாயக் கால்நடைப் பண்ணை
வெள்ளை வீதி
சுன்னாகம்.
சி-5570)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் நூலகம் யாழ்ப்பாணம்

# கொழும்பு பங்குமுதல் பரிமாற்றின் தோற்றமும் அதன் செயற்பாடும்

## மத்திய வைப்புத் திட்டம் செயற்படும் முறை

கல்வி

இலங்கையில் பங்குகள் மற்றும் பொறுப்பு ஆவணங்களுடன் கொழும்பு பங்குமுதல் பரிமாற்று அமைப்பும் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவும் முக்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. கல்விப் பொதுத் தராதர (உயர்தர) வகுப்பு மாணவர்களின் பாடத்திட்டத்திலும் வினாத்தாள்களிலும், கொழும்பு பங்குமுதல், பரிமாற்று, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகிய விடயங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன இவை பற்றி இந்நிறுவனங்களின் உதவியுடன் தென்னிலங்கையில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பல்வேறு கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டு போதிய விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. அத்துடன் பல நூல்களும் கிடைக்கத்தக்கதாக உள்ளன. ஆனால் எமது பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் இல்லாமல் இருப்பதனால் அம்மாணவர்களின் நலன்கருதி கொழும்பு பங்குமுதல் பரிமாற்றுத் தொடர்பான விடயங்கள் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன.

க. கனகரத்தினம்,
(சிரேஷ்ட உதவி நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம்)

கம்பனிகள் தாம் வழங்கும் பங்குகளை மீளக் கொள்வனவு செய்வதில்லை (மீட்கத்தக்க மேனயப்புப் பங்குகள் தவிர) இதனால் பங்குகளிலும் மற்றும் பொறுப்பு ஆவணங்களிலும் முதலீடு செய்வோர் தமது முதலீடுகளைத் தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காசாக்கிக் கொள்வதற்கும் இலாபம் தரக்கூடிய துறைகளுக்குத் தமது முதலீடுகளை மாற்றிக் கொள்வதற்கும் பங்குக் கைமாற்ற அமைப்பு அவசியமாகின்றது. இலங்கையின் முதலாவது பங்குக் கைமாற்ற அமைப்பு 1896 இல் ''கொழும்பு பங்குத் தரகர் சங்கம்'' என்ற பெயருடன் உருவாக்கப்பட்டது. பின்னர் இது 1904 இல ''கொழும்பு தரகர் சங்கமாக'' பெயர் மாற்றப்பட்டு செயற்பட்டு வந்தது. 1984 ஜூலை 2ஆம் திகதி பொதுமக்களும் பார்வையாளர்களாகப் பங்குபற்றக்கூடிய முறையில் கொழும்புத் தரகர் சங்கத்தால் ''வியாபாரத் தளம்'' அறிமுகப்படுத்தப்பட்டது. 1984 ஆகஸ்டில் மற்றுமோர் வியாபாரத் தளத்தை ''உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சரக்குமுதல் தரகர் சங்கம்'' என்ற மற்றுமோர் அமைப்பு செயற்படுத்தியது.

கொழும்பு தரகர் சங்கத்தின் பங்கு கைமாற்றப் பிரிவின் 5 தரகர் நிறுவனங்களும் உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்கு முதல் தரகர் கம்பனியின் 2 தரகர் நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து 1985 டிசம்பர் 2இல் உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கொழும்பு பிணையங்கள் பரிவர்த்தனை கம்பனியை (Colombo Stock Exchange (GTE, Ltd) உருவாக்கின.

உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கொழும்பு பிணைகள் பரிமாற்று கம்பனி தனது பெயரை 1990 மார்ச் மாதத்திலிருந்து ''கொழும்பு பங்குமுதல் பரிமாற்று கம்பனியாக மாற்றியமைத்து செயற்பட்டு வருகின்றது. இலங்கையில் பங்குச் சந்தை சர்வதேச ரீதியாக முக்கியத்துவத்தைப் பெறுவதற்கு இப்பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் தற்பொழுது பங்குகள் மற்றும் பொறுப்பு ஆவணங்களின் கைமாற்றத்திற்கு கொழும்பு பங்குமுதல் பரிமாற்று நிறுவனமே ஒரேயொரு நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

### அங்கத்தவர்கள்

கொழும்பு பங்குமுதல் பரிமாற்றுக் கம்பனியில் பங்குமுதல் தரகர்கள் மட்டுமே அங்கத்தவர்களாகச் சேர முடியும் இவர்களும் இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அனுமதி பெற்றவர்களாக இருக்க வேண்டும். தற்பொழுது கொழும்பு பங்குமுதல் பரிமாற்றுக் கம்பனியில் 15 தரகு நிறுவனங்கள் அங்கத்துவ நிறுவனங்களாக உள்ளன.

### நிர்வாகம்

கொழும்பு பங்குமுதல் பரிமாற்றுக் கம்பனி, கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகும். இதன் நிர்வாக சபையில் 9 உறுப்பினர்கள் இடம்பெறுகின்றனர். அவர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகின்றார்கள்.

1. கொழும்பு பங்குமுதல் பரிமாற்று நிறுவனத்தின் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படுபவர்கள் 5பேர் — இவர்கள் தரகர் சங்கங்களாக் காணப்படுவர்.

2. இலங்கை பிணைகள் பரிவர்த்தனைகள் ஆணைக்குழுவின் பொரிசின்பேரில் நிதியமைச்சரினால் நியமிக்கப்படுபவர்கள் 4 பேர் — இவர்கள் தரகர்கள் அல்லாதவர்களாகக் காணப்படுவர்.

### வியாபார முறை

தமது பங்குகளையும் பொறுப்பு ஆவணங்களையும் பதிவு செய்துகொண்ட, அதாவது விலை கூறப்பட்ட கம்பனிகளின் பங்குகள் மற்றும் பொறுப்பு ஆவணங்கள் மட்டுமே இதன்மூலம் கைமாற்றம் செய்துகொள்ளப்பட முடியும். விலை கூறப்படாத கம்பனிகளின் பங்குகள் மற்றும் பொறுப்பு ஆவணங்கள் கொழும்பு பங்குமுதல் பரிமாற்று கம்பனியின் ஊடாக கைமாற்றம் மேற்கொள்ளப்படுவதில்லை. விலை கூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளை அல்லது பொறுப்பு ஆவணங்களை இங்கு விற்க/வாங்க விரும்புபவர்கள் இக்கம்பனியின் தரகு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். நேரடியாக அவர்கள் பங்குகளைக் கொள்வனவு விற்பனை செய்ய முடியாது. மேலும் கொழும்பு பங்குமுதல் பரிமாற்று கம்பனி பங்குகளைக் கொள்வனவு செய்வதோ அல்லது விற்பனை செய்வதோ அல்லது பங்குகளின் விலையை நிர்ணயம் செய்வதோ இல்லை. பங்குகள் மற்றும் பொறுப்பு ஆவணங்களின் விலை அவற்றின் வழங்கல்/கேள்வி ஆகியவற்றிற்கு ஏற்ப நிர்ணயிக்கப்படுகின்றது.

### வியாபாரத் தளம்

கொழும்பு பங்குமுதல் பரிமாற்று நிறுவனத்தில் பங்கு வியாபாரத்திற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள இடமே வியாபாரத் தளமாகும். இது கொழும்பு யோர்க் வீதியில் அமைந்துள்ள மக்கின்ஸ் கட்டடத்தில் 2ஆவது தளத்திலுள்ளது. இலங்கையில் முதலாவது வியாபாரத் தளத்தை 1984 ஜூலை 2ஆம் திகதி கொழும்பு தரகர் சங்கம் அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் 2ஆவது வியாபாரத் தளத்தை உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பங்குமுதல் தரகர் கம்பனி ஏற்படுத்தியது. இவ் இரு நிறுவனங்களும் ஒன்றிணைந்து உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கொழும்பு பிணைகள் பரிவர்த்தனை மாற்று கம்பனியை உருவாக்கியதுடன் ஒரு வியாபாரத் தளத்தை ஏற்படுத்தின தற்பொழுது இவ் வியாபாரத் தளம் கொழும்பு பங்குமுதல் பரிமாற்று கம்பனியால் செயற்படுத்தப்படுகிறது. ஆரம்பத்தில் வியாபாரத் தளத்தில் பொது மக்களும் பார்வையாளராகக் கலந்து கொள்ளக் கூடிய வசதி செய்யப்பட்டு இருந்தது. ஆனால் தற்பொழுது அது நிறுத்தப்பட்டுள்ளது. வியாபாரத் தளம் திங்கள் முதல் வெள்ளி வரை (பொது விடுமுறை நாட்கள் தவிர) காலை 9-30 மணியிலிருந்து 11-45 மணி வரை செயற்படுகின்றது. இதில் கொழும்பு பங்குமுதல் பரிமாற்று கம்பனியின் தரகு நிறுவனங்கள் மட்டுமே பங்குபற்ற முடியும். ஒவ்வொரு தரகு நிறுவனமும் 8 பிரதிநிதிகளை வியாபாரத் தளத்தில் செயற்படுவதற்கு நியமனம் செய்யலாம். தரகர்களினாலேயே பங்குகள் கொள்வனவு விற்பனை செய்யப்படுகின்றன. இவர்கள் தமது வாடிக்கையாளர்கள் சார்பாக பங்குகளை கொள்வனவு விற்பனவு செய்வதில் ஈடுபடுவர். வியாபாரத் தளம் செயற்படும் இந்த 5 கிழமை நாட்களும் ''சந்தை நாட்கள்'' (Market Days) என அழைக்கப்படுகின்றது.

### தீர்ப்பனவு முறைகள் (Method of Settlement)

கொழும்பு பங்குமுதல் பரிமாற்று கம்பனி புதிய தீர்ப்பனவு முறையை 1993 ஜூனில் இருந்து அறிமுகப்படுத்தியுள்ளது. முன்னைய செயற்பாட்டு முறையின்படி கொள்வனவாளர் கொடுப்பனவுகளை 2ஆம், 4ஆம் புதன்கிழமைகளில் செலுத்தக்கூடியதாகவும் விற்பனையாளர் 2ஆம், 4ஆம் வெள்ளிக்கிழமைகளில் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. ஆனால் புதிய முறையின்படி T+5 T+7 என்ற முறை செயற்படுத்தப்படுகின்றது. இதன் கருத்து யாதெனில் கொள்வனவாளர் தாம் கொள்வனவு செய்த பங்குகளின் பெறுமதியை வியாபார நாளிலிருந்து (Trading Day) 5ஆம் சந்தை நாளில் (Market Day) செலுத்த வேண்டும் என்பதும் விற்பனையாளர் வியாபார நாளிலிருந்து (Trading Day) 7ஆம் சந்தை நாளில் (Market Day) தமது பங்குகளின் பணத்தை பெற்றுக்கொள்ளலாம் என்பதும் ஆகும்.

உ-ம்

A என்பவர் திங்கட்கிழமை தனது 1000 பங்குகளை தரகருடாக விற்பனை செய்தால் அதற்குரிய பணத்தை 2ஆவது வாரத்தின் புதன்கிழமையில் பெற்றுக்கொள்வார்.

B என்பவர் செவ்வாய்க்கிழமை 1000 பங்குகளை தரகருடாகக் கொள்வனவு செய்தால் அதற்குரிய கொடுப்பனவை 2ஆவது வாரத்தின் செவ்வாய்க்கிழமை செலுத்துவார்.

### மத்திய வைப்புத் திட்டம் (Central Depository System)

பங்குக்கைமாற்றம் தொடர்பாக கொழும்பு பங்குமுதல் பரிமாற்று கம்பனி 1991 செப்டெம்பர் 2ஆம் திகதியிலிருந்து மத்திய வைப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இது 1992 ஜூனில் இருந்து முழு அளவில் செயற்பட்டு வருகின்றது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென கொழும்பு பங்குமுதல் பரிமாற்று கம்பனி ஒரு உப கம்பனியை கொழும்பு மத்திய வைப்புத்திட்ட கம்பனி (தனியார்) (Central Depository System) வரையறுக்கப்பட்டது என்ற பெயருடன் உருவாக்கியுள்ளது.

பங்குகளை வாங்குவதற்கும் விற்பதற்கும் பங்குதரகர்களின் உதவியை நாடும் கொள்வனவாளரும் விற்பனையாளரும் மத்திய வைப்புத் திட்டக் கம்பனியில் தரகர் மூலமாக தமது பெயரில் கணக்கு ஒன்றினை ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் விற்பனையாளர்கள் தமது பங்குப் பத்திரங்களையும் பங்குகைமாற்றப்படிவங்களையும் உடனடியாகத் தமது தரகரிடம் ஒப்படைக்க வேண்டும். மத்திய வகுப்புத் திட்டத்திலுள்ள பங்குகளை ஒப்படைத்தவரினது கணக்கில் செலவு வைக்கப்படும். பங்குகள் விற்கப்பட்டதும் உடனடியாகவே அவை அவரது கணக்கில் வரவு வைக்கப்பட்டு கொள்வனவாளர் கணக்கில் செலவு வைக்கப்படும். ஒப்படைக்கப்பட்ட பங்குகளில் விற்கப்படாத பங்குகள் இருப்பின் அவற்றை மத்திய வைப்புத் திட்டத்தில் உள்ள தமது கணக்கில் விட்டுவைக்கலாம், அல்லது மிகுதிப் பங்குகளுக்கான பங்குப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். மிகுதிப் பங்குகளுக்குரிய பங்குப் பத்திரத்தை பெற்றுத்தருவதற்குரிய நடவடிக்கையை மத்திய வைப்புத்திட்டக் கம்பனி மேற்கொள்ளும் மிகுதி பங்குகளுக்கான பங்குப் பத்திரங்கள் உரிய கம்பனியால் 14 நாட்களுக்குள் மத்திய வைப்புத் திட்டக் கம்பனிக்கு அனுப்பி வைக்கப்படும். அவை உரியவருக்கு விநியோகிப்பதற்கு அவரது தரகரிடம் மத்திய வைப்புத் திட்டக் கம்பனி ஒப்படைக்கும். மாதாந்தம் கணக்குக்கூற்று வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் வியாபாரம் நடைபெற்ற நாளிலேயே மத்திய வைப்புத் திட்டத்திலுள்ள கொள்வனவாளரின் கணக்கில் அவர் வாங்கிய பங்குகளுக்கான செலவுப்பதிவு இடம்பெறுகிறது. அத்துடன் பங்குப்பத்திரங்களும் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. உரிமை வழங்கல் உபகாரப்பங்கு வழங்கல் தொடர்பாகவும் தரகர்கள் உரிய நடவடிக்கை எடுப்பர். கணனிமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் விரைவான சரியான கணக்கு வைப்பினை உறுதிப்படுத்துகின்றன.

### பட்டியலிடப்படுவதற்கான நிபந்தனைகள்

கொழும்பு பங்குமுதல் பரிமாற்றுக் கம்பனியின் விதிகளின் படி ஒரு கம்பனி தனது சாதாரண பங்குகளுக்கான கூறுவிலையைப் பெறுவதற்குப் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

1. ஆகக் குறைந்தது இறுத்த மூலதனமாக ரூபா 50 லட்சத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

2. 25வீதம் ஆன பங்குகள் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு அவர்களால் வைத்திருக்கப்பட வேண்டும்.

3. கூறுவிலைக் கட்டணமாக கூறுவிலை கோரப்படும் பிணையங்களில் முதற்பெறுமதியில் 15 வீதம் செலுத்த வேண்டும். ஆனால் இதன் இழிவு அளவு ரூபா 5,000/- உயர்வு அளவு ரூபா 50,000/- ஆகும்.

4. விண்ணப்பம் உரிய படிவத்தில் கொழும்பு பங்குமுதல் பரிமாற்று அமைப்பின் தரகு நிறுவனமொன்றின் ஊடாகச் சமர்ப்பிக்கப்படல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் அமெரிக்காவின் சமாதான முயற்சிகள் எவ்வளவுதூரம் வெற்றி அளிக்கும்?

1978ஆம் ஆண்டு எகிப்து, இஸ்ரவேல், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையில் அமெரிக்காவின் காம்ப் டேவிட்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பின்னர், மத்திய கிழக்குத் தொடர்பான மற்றொரு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொள்ளும் முயற்சிகள் கடந்த 21 மாதகாலமாக சுறுசுறுப்படைந்து வருகின்றன. இஸ்ரவேலுடன் எல்லைகளைக் கொண்ட ஏனைய அரபு நாடுகள் அப்போது சமாதான முயற்சிகளுக்கு இணங்காததால் எகிப்தை மட்டும் தன் வசப்படுத்தி அந்த ஒப்பந்தத்தை அமெரிக்காவினால் செய்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர், அப்போதைய இஸ்ரவேல் பிரதமர் பெகின் அப்போதைய எகிப்திய ஜனாதிபதி அன்வர் சாதாத் ஆகியோர் கைவெழுத்திட்ட காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் 1967 ஜூன் யுத்தத்தில் சிறையில் தான் கைப்பற்றிய பெரும் பகுதியை இஸ்ரவேல் எகிப்துக்கு விட்டுக்கொடுக்க நேரிட்டபோதிலும் எல்லையில் இருந்த பலம்வாய்ந்த எதிரி நாடு ஒன்றை அணைத்துக்கொள்ள முடிந்தது.

தற்போது கடந்த 21 மாத காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளிலும் அமெரிக்காவே ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் வாரன் கிறிஸ்தோபர் (Warren Christopher) இது தொடர்பான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வார இறுதியில் மத்திய கிழக்குக்கு வந்திருந்தார்.

இஸ்ரவேல், ஜோர்தான், சிரியா லெபனான் மற்றும் பலஸ்தீனத் தலைவர்கள் உள்ளடங்கிய சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதே வாரன் கிறிஸ்தோபரின் நோக்கம் ஆகும்.

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இனிச் செய்து கொள்ளப்போகும் ஒப்பந்தம் காம்ப் டேவிட் ஒப்

## சோவியத் கூட்டமைப்பு சிதறுண்டது அரபு நாடுகளுக்குப் பெரும் இழப்பு

பந்தம் போல் அன்றி பிரச்சினையில் சம்பந்தப்பட்ட முழு மத்திய கிழக்கு நாடுகளையும் உள்ளடக்கிய ஒன்றாக இருக்கப் போகிறது.

### மூன்று யுத்தங்கள்

1949ஆம் ஆண்டு இஸ்ரவேல் என்ற ஒரு நாடு உருவான பின்னர் மத்திய கிழக்கில் இஸ்ரவேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் மூன்று யுத்தங்கள் நடந்து முடிந்துவிட்டன.

கடைசியாக நடைபெற்ற 1973 அக்டோபர் யுத்தம் மூலம், இஸ்ரவேலுடன் இனி போரிட்டு வெல்ல முடியாது என்ற நிலைக்கு எகிப்து வந்தது. இதனை சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தியே இஸ்ரவேலுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றை (காம்ப் டேவிட் ஒப்பந்தம்) அமெரிக்காவினால் செய்து வைக்க முடிந்தது.

காம்ப் டேவிட் ஒப்பந்தம் அரபு நாடுகளில் இருந்து எகிப்தைத் தனிமைப்படுத்தி பிளவு படுத்தியது. பிரச்சினையில் சம்பந்தப்பட்ட முழு மத்திய கிழக்கு நாடுகளையும் உள்ளடக்கிய சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள மேற்கொள்ளப்பட்டுவரும் தற்போதைய முயற்சிகளுக்கு காம்ப்டேவிட் ஒப்பந்தமே அடித்தளமாக அமைந்தது எனலாம்.

காம்ப்டேவிட் ஒப்பந்தம் மூலம் பலம் இழந்த அரபு நாடுகளுக்கு கடந்த தசாப்த இறுதிப் பகுதியில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட பிளவு பேரிடியாகியது.

நீண்டகாலமாக இஸ்ரவேலுடன் போராடி வந்த பலஸ்தீன விடுதலை ஸ்தாபன (P.L.O.) தலைவர் யஸீர் அரபாத்தையும் பேச்சுவார்த்தை என்ற வலைக்குள் அமெரிக்காவினால் விழுத்தி விட முடிந்ததால் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளுக்கு முன் எப்போதும் இல்லாத அளவு சாதகமான சூழ்நிலை தற்போது இருந்து வருகிறது.

காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் பின்னர், எகிப்தைக் கைவிட்ட சோவியத் யூனியன் இராணுவ ரீதியில் சிரியாவைப் பலப்படுத்தி அரபு நாடுகளுக்குள் பலம் வாய்ந்த நாடாக மாற்றியது.

ஆனால் காலம் செல்லச் செல்ல அந்த இடத்தை இஸ்ரவேலுடன் எல்லையைக் கொண்டிராத ஈராக் எடுத்துக் கொண்டது.

வளைகுடா யுத்தத்தில் தோற்கடிக்கப்படும் வரை கடைசியாக ஈராக்கே இஸ்ரவேலுக்குப் பெரும் சவாலாக இருந்து வந்தது.

### ஈராக்கின் போக்கு

தற்போதும் வாரன் கிறிஸ்தோபரின் சமாதான முயற்சிகளைக் குழப்புவதையே நோக்கமாகக் கொண்டு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் செயற்பட்டு வருகிறார். கடந்த மாத இறுதியில் லெபனானில் உள்ள ஈராக் ஆதரவு ஷியா முஸ்லிம் இயக்கமான ஹிஸ்புல்லா இயக்கத்தினர் (Hizbollah) இஸ்ரவேலின் வடபகுதியில் நடத்திய றொக்கெட் தாக்குதல் தென்லெபனானில் பெரும் யுத்தமாகவே வெடித்திருந்தது.

1982 தென்லெபனான்படையெடுப்புக்குப் பின்னர் இஸ்ரவேல் பெரும் அளவில் யுத்த விமானங்களையும், பீரங்கிகளையும் பயன்படுத்தி தென்லெபனானில் பெரும் அழிவை ஏற்படுத்தி இருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனின் (Bill Clinton) வேண்டுகோளுக்கு இணங்கி இஸ்ரவேல் தனது தாக்குதலை நிறுத்திக் கொண்டபோதிலும் இஸ்ரவேல் மற்றொரு தாக்குதலை நடத்த மாட்டாது என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை.

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யஸீர் அரபாத் பேச்சு வார்த்தை என்ற வலைக்குள் விழுந்த பின்னர் இஸ்ரவேலுக்கு எதிராக தற்போது பலம் வாய்ந்த கெரில்லா இயக்கம் எதுவும் இல்லாத நிலையிலும்—

காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் பின்னர் எகிப்து பிரச்சினையில் இருந்து நழுவிக் கொண்டது— வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக் பலவீனமாக்கப்பட்டது— இவற்றால் இஸ்ரவேலுக்கு எதிரான அரபு நாடுகள் அணி பலவீனமடைந்த நிலையிலும்—

அரபு நாடுகளுக்கு ஆயுத உதவி அளித்து வந்த சோவியத் யூனியன் சிதறிப்போன நிலையிலும்—

தற்போது நடைபெறும் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் இஸ்ரவேலுக்கு சாதக

சூரிய காந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

மாகவே அமையும் சாத்தியம் இருந்து வருகிறது.

ஆனால்தான் 1967 ஜூன் யுத்தத்தில் கைப்பற்றிய பிரதேசங்களை இஸ்ரவேல் எவ்

—சஞ்சாரன்—

வளவு தூரம் விட்டுக் கொடுக்கும் என்பதிலும் —

பலஸ்தீனர்களுக்கு எந்த அளவுக்கு சுயாட்சி வழங்கப் போகிறது என்பதிலுமே நிரந்தர சமாதானம் தங்கி இருக்கிறது. ★

## துர்க்கை அம்மன் வருடாந்த உற்சவம்

ஏழாலை, ஆக. 8

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 31ஆம் திகதி வரை நடைபெறும்.

இது தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த மாதம் 26ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேச செயலர் திரு நா. வேதநாயகன் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. திருவிழாத் தொடர்பாக எடுக்க வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் பற்றி இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

(த-க-45)

## உரவகைகளின் விலைகள் விரைவில் குறைக்கப்படும்

கொழும்பு ஆக. 8

உரவகைகளின் விலைகள் குறைக்கப்படும். அடுத்த ஆண்டு 5 ஆயிரம் ட்ராக்டர்கள் விவசாயிகள் சங்கம் வகிக்கும் அமைப்புகளுக்கு வழங்கப்படும்.

விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சித்துறை அமைச்சர் தர்மதாஸா பண்டா கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

கமத்தொழிற்சேவை சட்டத்திருத்த மசோதா மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

[த-எ]

### கௌரவிப்பு

சரசாலை வெற்றைத்திடல் ஸ்ரீ வீரமாகாளியம்மன் தேவஸ்தானத்தில் பத்துத் தினங்கள் தொடர் பாரத இலக்கிய விரிவுரையாற்றிய கவிஞர் த. நாகேஸ்வரன் அவர்களுக்கு மேற்படி தேவஸ்தானம் "இலக்கிய செம்மல்" எனப் பட்டமளித்தும், பொன்னாடை போர்த்தியும் அண்மையில் கௌரவித்தது.

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 — 05 — 1930 | 09 — 07 — 1993 |

### பிரான்சிஸ் மிக்கேல்பிள்ளை

குருநகரைச் சேர்ந்த பிரபல கவிஞரும், நாட்டுக்கூத்து அண்ணாவியாருமாகிய பிரான்சிஸ் மிக்கேல் பிள்ளையின் ஆன்ம சாந்திக்காக நாளை (9-8-93) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 2, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(26859)

## கொழும்பு ..


(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

5. பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக இருக்க வேண்டும்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்குச் சந்தை முக்கிய இடம்பெறுவதனால் அதில் பல்வேறு மாற்றங்கள் காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வருகிறது. அரசாங்கமும் இதில் அதிக அக்கறை செலுத்துவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய புதிய முறைகள் முதலீடுகளை அதிகரித்து பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றன.

## சட்டத்தரணி-நொத்தாரிசு



யாழ்/ கல்வியங்காடு, ஆட்டுப்பட்டி, முதலியார் தோட்டம், கள்ளியூர்-கனக. நடராஜா அண்மையில் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சேர்க்கப்பட்டுள்ளார்.

(A 661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# உதயன்:

## வடக்கின் வளங்கள்

நல்லூர் முருகனின் திருவிழாக் காணச் செல்லும் பக்தர் கூட்டத்தை கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர் நடத்தும் பொருட்காட்சி.

தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக வடக்கில் வளம் இல்லை என்று கூறியவர்களுக்கும், இப்போதும் அவ்வாறே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அவர்களின் கண்களை திறப்பதாக விளங்குகிறது. அந்தப் பொருட்காட்சி என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?—என்ற கேள்வியை அந்தப் பொருட்காட்சி அத்தகையோரிடம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

வடக்கில் எல்லா வளங்களும் உண்டு. மூலவளங்கள் உண்டு; மூளை வளமும் உண்டு. மண் வளம், கடல்வளம், வனவளம், கனியவளம் என்று வளங்களுக்கு குறைவில்லை. இத்தனை காலமாக அவற்றை இனங்கண்டு மக்களின் தேவைகளுக்கும், சமூக வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் வழி செய்யாமல் இருந்துவிட்டோமே என்ற குற்ற உணர்வு பொருட்காட்சியைப் பார்க்கும் எவரையும் உள்ளூர உறுத்தும்.

யுத்தம் தொடங்கிய மூன்று வருடங்களில் வசதிகள், வாய்ப்புக்கள் இல்லாத பின்னணியில் எமது வளங்களை இத்துணை சிறப்பாகப் பயன்படுத்த முடியுமெனில்...

அரசியல் சுதந்திரம் கிடைத்து வாய்ப்புகளும், வசதிகளும், நிதி வளமும் வேண்டிய அளவில் கிடைத்துவிட்டால் நாமே எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வோம்.

மக்களுக்குத் தேவை ஏற்படும்போது புதியனவற்றைச் செய்யலாம். வேறு வழி இல்லை என்ற நிலையில் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்கலாம் என்பனவற்றையும் நல்லூர்ப் பொருட்காட்சி புகட்டுகிறது.

பாரம்பரிய தொழில்களும் நவீன தொழில் முறைகளும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்து வளர முடியும். ஒன்றுக்காக மற்றதைப் புறந்தள்ள வேண்டியதில்லை என்ற கருத்தையும் பொருட்காட்சி உணர்த்துகிறது.

யாழ்ப்பாணத்திற்குள் முடங்கிக் கிடக்கும் மனப்பாங்கினை மாற்றி வன்னிப் பகுதிக்கு நகர்ந்தால் வளமான வாழ்க்கைக்கும், சமூகச் சிறப்புக்கும் விரைவில் வழி பிறக்கும் என்ற உண்மையையும் அது ஊட்டுகிறது.

பயனுள்ள தகவல்களும், தரவுகளும் தமிழர் பொருளாதார வாழ்க்கை நிலை மேம்பாட்டினை கோடிட்டுக் காட்டுகின்றன. குளங்கள் புனரமைப்பு, சிக்கன அடுப்பு, கம்புப் பயிர்ச்செய்கை, சவுக்கு மர நடுகைத் திட்டம், பனை - தென்னை வள அபிவிருத்தி ஆகியவற்றைச் காட்சிக் கூடங்கள் பிரதிபலிக்கின்றன.

அக்கறையும், முயற்சியும் இருந்தால் பொருளாதார உற்பத்தித் துறைகளில் நாம் சொந்தக்காலில் நிற்கும் பலமடைவோம் என்பதை பொருட்காட்சி நிரூபிக்கிறது எனவே இவ்வழியில் அதிக நாட்டம் செலுத்துவோமாக.

## போசாக்கு உணவு

உடுவில், ஆக. 8

சண்டிலிப்பாய் பிரதேச செயலகர் பிரிவில் உள்ள கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு மாதத்துக்கு இரண்டு தடவைகள் போசாக்குணவு வழங்கப்பட்டு வருகின்றது.

மானிப்பாயில் உள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஹூவோஸ் அமைப்பின் உதவியுடன் ஒவ்வொருவருக்கும் ஒன்றரைக்கிலோ வீதம் போசாக்குணவை வழங்கி வருகின்றது.

(த-152)

# றொனி டி மெல் மீண்டும் லண்டன் திரும்புகிறார்

## வந்த நோக்கம் நிறைவேறவில்லை

வந்த நோக்கம் நிறைவேறாமல் முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் மீண்டும் லண்டன் திரும்புவார்.

விஷயம் தெரிந்தவர்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இரண்டாவது தடவையாக கொழும்பு திரும்பிய றொனி டி மெல்லுக்கு நிதி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று கூறப்பட்டது.

அவரை ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேர்த்து முக்கிய பதவி வழங்குவதை கட்சியின் பிரமுகர்கள் சிலர் எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது.

றொனி டி மெல் கட்சியின் அடிநிலை உறுப்பினராக முதலில் சேர்ந்து கொள்ள வேண்டும். பாரகுட்டில் வந்திறங்கி பதவியைப் பெற அவரை அனுமதிக்க முடியாது என்றும் சில பிரமுகர்கள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் றொனி டி மெல் லண்டனுக்கு மீண்டும் திரும்பலாம். இப்படி 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது

(த-எ)

# 30ஆயிரம் ரூபா பணத்தை ஏப்பமிட்ட பௌத்த பிக்கு

கொழும்பு, ஆக. 8

அநுராதபுரத்தில் தங்கியிருந்த விகாரையில் 30 ஆயிரம் ரூபா பணத்தை ஏப்பமிட்ட பௌத்த பிக்கு ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்புக் கோட்டையில் வைத்து அவர் கைது செய்யப்பட்ட சமயம் அவரிடம் இருந்து 9 ஆயிரம் ரூபாவை பொலீஸார் கைப்பற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டது

(த-3)

# விதை உருளைக்கிழங்கு எடுத்து வர நடவடிக்கை

அரியாலை, ஆக. 8

வடபகுதிக்கு 150 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கை கப்பலில் எடுத்து வருவதற்கு யாழ். மாவட்ட விவசாய திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ் மாவட்ட விவசாய திணைக்களத்தை சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இது தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ள கொழும்பு சென்றுள்ளார்.

இதே வேளை விதை நெல்லையும் காலபோக மரக்கறி விதைகளையும் கொழும்பில் இருந்து கப்பலில் வடபகுதிக்கு எடுத்து வருவதற்கும் மாவட்ட விவசாய திணைக்களம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(த-17)

# ஐ.தே.க.-ஜ.ஐ.தே.மு. இணைவு அறிவிப்பு இம்மாத மத்தியில்

கொழும்பு, ஆக. 8

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைவது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு இம்மாத மத்தியில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஷயத்தில் ஜனாதிபதி விஜேதுங்காவும் திரு. காமினி திஸநாயக்காவும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளார்கள் என்றும்— சில பிரிவினரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இணைப்பு சுமுகமாக இடம்பெறும் என்றும் ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது

இதனிடையில்— முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் தலைமையில் இயங்கி வந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அலுவலகம் கடந்த வாரம் அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது

இதே வேளை— திருமதி சிறிமானி அத்துலத்முதலி அமெரிக்காவுக்குச் செல்வதற்கு முன்னர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில், எதிர்காலத்தில் அரசியலில் பங்குபற்றும் எண்ணம் தமக்கு இல்லை என்று கூறியிருக்கிறார். இருகட்சிகளின் இணைப்பு விவகாரம் உச்சக்கட்டத்துக்கு வந்துள்ள சமயத்தில் திருமதி சிறிமானி அமெரிக்கா சென்றிருப்பது, இணைப்பை எதிர்க்கும் பிரிவினரின் உற்சாகத்தை இழக்கச் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-எ)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்;

★ நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசை அரங்கில் வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசை மாலை 6 மணி முதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5 15 - 6-15 'அர்ச்சுனன் தவசு'' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்—

பிற்பகல் 2—3மணிவரை ''அப்பரின் அருளமுதம்'' எனும் பொருளில் சிவஸ்ரீ கை. திருஞான சம்பந்தக் குருக்கள் சமயச் சொற்பொழிவு.

மாலை 5 30—6-30 மணி வரை பிரசங்கபூஷணம் ந சிவசண்முகமூர்த்தி ''செஞ்சோற்றுக்கடன் தீர்த்த செம்மல்'' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00—4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(த-111-126)

## இன்றைய கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிறு நடைபெற இருந்த விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல் எதிர் வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சமாச மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது

(த)

நீரின்றி போனால்
நீயுமில்லை நானுமில்லை

## போரில் வெற்றி காண

# சகல அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும்!

## நெவில் பெர்னாண்டோ கூறுகிறார்

''வடக்கு - கிழக்கில் நடக்கும் கொடூரமான போரை வெற்றி கொள்வதற்கு சகல கட்சிகளும் வேறுபாடுகளை மறந்து ஓரணியில் திரள வேண்டும்''

களுத்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ இப்படிக் கோரியுள்ளார்.

பாணந்துறையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பங்குபற்றிய மத வைபவம் ஒன்றில் கலந்து பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மக்களின் பொது நலனுக்காக நாமெல்லோரும் கரம் கோர்த்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னரான காலகட்டத்தில் எந்தவொரு முக்கிய பிரச்சினைக்குமே தீர்வு காண முடியவில்லை. தலைவர்கள் பிளவுபட்டிருந்தமையே இதற்கு காரணமாகும்.

அரசாங்கமும், எதிர்கட்சிகளும் ஒன்றையொன்று எதிர்க்கின்றன. இந்தக் 'கயிறு இழுப்புக்கு முடிவு வேண்டும்'' என்றார்.

நான் ஐ. தே. க. வில் சேரப் போவதாக வதந்தி கிளப்பப்பட்டுள்ளது. ஆனால் நான் ஐ. தே. கவில் இணையப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

(த-3)

நல்லூர் உற்சவகால [illegible]

## எங்கள் துயர் தீராயோ?

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

சிங்கார வேலவனே - சிவசண்முகா
கங்காதரன் மகனே - கருணைக்கோர் ஆகரமே
(சிங்கார)

அநுபல்லவி

மங்காத திருவருளை - வானிடர்கள் வேண்டியே
பாங்காக உமைச் சூழ்ந்து - பாடிப்பணிகின்றார்
(சிங்கார)

சரணம்

தேவர் துயர் தீர்த்த அப்பா - எங்கள் துயர் தீராயோ
வடிவேல் கரத்துத் தாங்கி - சேவற் கொடி அசைய
வண்ணமயில் ஏறிவந்து - வேண்டும் வரம் தாரும் கந்தா
யாழ் நல்லை நகர் திகழும் - வள்ளி குஞ்சரி நாயகனே
(சிங்கார)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி

அமைதியான, அழகான், பாதுகாப்பான, துப்புரவான சூழலில் அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கு உகந்த இடம் வில்லூன்றி. பல லட்ச ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. சகல வசதிகளுமுடையது. மூர்த்தி, தலம், தீர்த்த விசேடம் மிக்கது. உங்கள் குடும்ப குருக்களை அழைத்து வந்து கிரியைகள் செய்யலாம். விரும்பின் குருக்கள் ஒழுங்கு செய்தும் தரப்படும்.

பரிபாலன சபை.
**வில்லூன்றி புனித தீர்த்தம்.**

வில்லூன்றி,
7 - 8 - 1993, (26858)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுப்பிள்ளை இலங்கையர்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், வர்த்தலைவிளானை வசிப்பிடமாகவும், தற்பொழுது கோப்பாய் பழம் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை இலங்கையர் 1993 - 08 - 07 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் திரு. கயிலாயபிள்ளை (கணக்குக் கிளை கச்சேரி, யாழ்ப்பாணம்) யின் அன்புத் தந்தையும், தருமவதனாவின் அன்பு மாமனாரும், சுபாஜினி, நிரோஜினி, கைலாஜினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (93-08-08) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோப்பாய் மயானத்தில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. கயிலாயபிள்ளை
(மகன்)

கூட்டுறவு வளவு
பழம் றோட்,
கோப்பாய். (26866)

### திருமதி கார்த்திகேசு இலட்சுமி
(நயினாதீவு)

நயினாதீவைச் சேர்ந்தவரும் முருகேசர் வீதி முத்திரைச்சந்தியில் வசித்தவருமாகிய திருமதி கார்த்திகேசு இலட்சுமி அவர்கள் 7 - 8 - 93 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற நாகமணிப்புலவர் – சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்த்தகர் கந்தையாபிள்ளை கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும், சாயுச்சியநாதன் (கச்சேரி, யாழ்ப்பாணம்), சாயுச்சியாம்பாள் (பேபி), சந்திரகாந்தா, சந்திரபாலன் (வர்த்தகர், வவுனியா), தயாபரி (இளைப்பாறிய சுருக்கெழுத்தாளர்), சரோஜினி (தாதி, யாழ். போதனா வைத்தியசாலை), கந்தையாபிள்ளை (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தயாரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற குற்றாலலிங்கம் (தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்), காலஞ்சென்ற டாக்டர் கதிரேசு, ரேவதி, அமிர்தலிங்கம் (கனடா), சுந்தரலிங்கம் (புங்குடுதீவு - யாழ். மினி பஸ் நேரப் பதிவாளர்), வதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், யாமினி (பொறியியல் பீடம், மொறட்டுவ), கிருபாகரன் (இங்கிலாந்து), சந்திரிகா (கனடா), காலஞ்சென்ற பாபு, ரேணுகா (பிரான்ஸ்), பாமா (பிரான்ஸ்), கிருஷ்ணமணி, சுரேஷ், சுமித்திரா, கடம்பன், கதிர்மணி (கனடா), சுதாகர், திவாகர், சுபாஸ்கரன், சுமதி, பபி, தங்கா, சுதா, அமிர்தகுமாரி, சுகிர்தகுமாரி, சுவர்ணகுமாரி, லோகதர்சினி, விஜயதர்சினி, காலஞ்சென்ற சுதாகர், லக்ஷாயினி, கார்த்திகாயினி, கிருஷாந்தி, தட்சாயினி ஆகியோரின் பேர்த்தியும், மஹீதரன், கௌதம் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், நடராசா, சின்னத்துரை, பொன்னுத்துரை, பவானி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, கண்மணி, சோமசுந்தரம், சிவசிதம்பரம், இராசம்மா மற்றும் பராசக்தி, கனகசுந்தம், திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8 - 8 - 93 இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. சாயுச்சியநாதன்
(மகன்)

15/3 முருகேசர் ஒழுங்கை,
நல்லூர் (26867)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 8-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# எம்.பிக்களின் எண்ணிக்கை 250 ஆக அதிகரிக்கலாம்

கொழும்பு, ஆக. 8

அரசமைப்பில் செய்யப்பட உள்ள உத்தேச திருத்தங்கள் மூலம் நாடாளுமன்றத்தில் எம். பிக்கள் எண்ணிக்கை 225 இலிருந்து 250 ஆக அதிகரிக்கப்படலாம் என்று 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 250 பேரில் 125 பேர் தொகுதி ரீதியாகவும் 125 பேர் விகிதாசார ரீதியிலும் தெரிவு செய்யப்படுவர் என்று இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்புத் திருத்தங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கை எதிர்வரும் டிசம்பரில் வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## இன்று

கந்தரோடை ஐங்கரன் சிறுவர் மாதிரி பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (இ)

## உயர்கல்வி கருத்தரங்கு

பாடசாலைகளின் இன்றைய உயர் கல்வி நிலைமை தொடர்பாக இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் சகல கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஜி. சீ. ஈ. சாதாரணதர, உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-5)

## யாழ். இலக்கிய வட்ட சாகித்திய விருது

யாழ் இலக்கிய வட்டத்தின் இலக்கியப் பேரவை கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்தி வரும் தமிழ் எழுத்தாளர்களுக்கான சாகித்திய விருது வழங்கும் நிகழ்வில்— இம்முறையும் 1991/92ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதிலும் வெளியிடப்பட்ட நூல்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட எட்டு பேருக்கு சாகித்திய விருதும் நால்வருக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன

கலாநிதி இ. பாலசுந்தரம் ''நாட்டார் இசை இயல்பும் பண்பாடும்'' இலக்கிய ஆய்விற்காகவும், திரு செங்கை ஆழியான் ''அக்கினி'' நாவலுக்காகவும், திரு க. சட்டநாதன் ''உலா'' சிறுகதைத் தொகுதிக்காகவும், திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் ''நெருப்பு மழை'' கவிதைத் தொகுப்பிற்காகவும் திரு. வ. இராசையா ''சண்டியன் ஒநாய்'' சிறுவர் இலக்கியத்திற்காகவும், கலாநிதி. நா. ஞானகுமாரன் ''பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்'' சமயத்திற்காகவும், கலைப் பேரசு ஏ. ரி. பொன்னுத்துரை ''மயில்'' நாடகத்திற்காகவும், திரு. அனுவை. நாகராஜன் ''தேடலும் பதித்தலும்'' அறிவியலுக்காகவும், சாகித்திய விருதுகளை பெறுகின்றனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாத முற்பகுதியில் நாவலர் மண்டபத்தில் நடைபெற உள்ளது. (க-162)

## விளையாட்டு நிகழ்வுகள்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 23 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திவரும் 7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — அரியாலை ச. ச. நிலைய அணி எதிர் புனித ஆரோக்கியநாதர் வி. க அணி

★ பிற்பகல் 4 மணி — கொழும்புத்துறை இளைஞர் வி. க. அணி எதிர் கொய்யாத் தோட்டம் வி. க. அணி.

o o o

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டமும் காட்சி ஆட்டமும் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ காட்சியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் ''பி'' அணியை எதிர்த்து குருநகர் சென். றொக்ஸ் அணியும்—

★ அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளன.

# வடக்கு-கிழக்கில் ராணுவ நடவடிக்கை தொடர்கிறது

## பிரிகேடியர் அங்கமன தெரிவிப்பு

கொழும்பு, ஆக. 8

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் எவ்வித தங்கு தடையுமின்றி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் ஸனில் அங்கமன இதனை நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில் ''விடுதலைப் புலிகளின் தளங்களை இனங்காணாமல் அவற்றின் மீது விமானத் தாக்குதலை படையினர் ஒருபோதும் நடத்துவதில்லை'' என்று குறிப்பிட்டார்.

குடிமக்களுக்கு விமானத்தில் இருந்து துண்டுப்பிரசுரங்கள் மூலம் அறிவித்த பின்னரே விமானத்தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## தபால்களை உடன் சேர்க்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 8

வாதுவ கப்பலில் வெளியூர் தபால்கள் எடுத்துச் செல்லப்பட இருப்பதால் தபால்களை இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு முன் யாழ். பிரதம தபாலகப் பெட்டியில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபால் அதிபர் கோரி உள்ளார். (இ-17-162)

## ஜீவாகாரம்

பூம்புகாரிலுள்ளநகீரன் குடியிருப்பில்வசிக்கும்இடம்பெயர்ந்த ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு ஜீவாகாரம் வழங்கும் செயல் திட்டத்தினை யாழ். வட்ட லியோ கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## மாயக்கைக் குளம் புனரமைப்பு

அல்வாய் மாயக்கைக்குளம் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தினர் இப்பணியை மேற்கொள்ளவுள்ளனர். (க-173)

## யுத்தத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டன.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் விடுதலைப் புலிகளை இராணுவத்தினால் வெல்ல முடியவில்லையென்றால், அரசு ராஜினாமாச் செய்யவேண்டும் என்று பலரும் அந்த மாநாட்டில் வலியுறுத்திப் பேசினர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான வழக்கறிஞர் எஸ். எல் குணசேகரா அங்கு பேசுகையில் தெரிவித்ததாவது:-

எமது இராணுவத்தை பலப்படுத்த வேண்டும். அவர்களை நன்குகவனிக்க வேண்டும் இந்த நாட்டின் அரசியல் கட்சிகள் யுத்தத்துக்குத் தீர்வு வேண்டும் என்று கூறுகின்றன. ஆனால் அதனை எப்படித் தீர்க்கலாம் என்று அவர்கள் கூறுவில்லை. சகல அரசியல் கட்சிகளும் ஆட்சியை கைப்பற்றுவதிலேயே கவனம் செலுத்துகின்றன. எமது இராணுவத்தினரின் பலம் புலிகளின் பலத்தை விடக் குறைந்தது எனக் கருதினால், அந்த நிலை இருப்பின் நாம் அடிபணிந்து யுத்தமிடுவதை நிறுத்துவதே ஒரே வழி.

படையில் சேர்ந்து போராடும் வறிய இளைஞர்களின் உயிர்களை காப்பாற்றுவோம். அப்படி இல்லா விட்டால் அரசு ராஜினாமா செய்து நாட்டு மக்களிடம் ஆட்சிப் பொறுப்பை கொடுக்க வேண்டும் — என்று தெரிவித்தார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org